உ

ஓம் முருகா




அமரர் சந்திரவதனா - தனபாலசிங்கம்

அவர்கள்

சிவபதப் பேறெய்தியமை குறித்து
வெளியிடப்பெற்ற

# நினைவு மலர்

29-10-1996

"ஒரு பொல்லாப்பு மில்லை
எப்பவோ முடிந்த காரியம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமரர் சந்திரவதனா - தனபாலசிங்கம்

தோற்றம்
**13-05-1955**

மறைவு
**29-09-1996**

திதி

அபர பக்ஷதிருதியை திதி

வீற்றிருந்தாள் வீதி தனிலிருந்தாள்
நேற்றிருந்தாள் இன்று வெந்து நீறுனாள் - பாற்றெளிக்க

எல்லீரும் வாருங்கள் ஏதென்றிரங்காமல்
எல்லாம் சிவ மயமேயாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

### அமரர் சந்திரவதனா – தனபாலசிங்கம்

### அவர்களின்

# வாழ்க்கைச் சுவடுகள்

ஈழவள நாட்டின் மகுடமாம் யாழ்ப்பாணத்தின் வடக்கே சைவத் திருவும் தெய்வத் தமிழும் செழித்து வளரும் அளவையூரின் கண் வேளான் பெருங்குடியில் வாழையடி வாழையாக வந்த தன பாலசிங்கம் (J. P) அவர்களின் மூத்த திருமகனார் நவரெத்தினத் திற்கும் அன்னை பரமேஸ்வரிக்கும் குல தெய்வங்களின் கிருபா கடாட்சத்தால் 13. 05. 1955 ல் சந்திரவதனா என்னும் நாமங் கொண்ட புதல்வியர் வந்துதித்தார்.

குடும்பத்தின் குலவிளக்காய் மூத்த திருவிளக்காய் வந்துதித்த சந்திரவதனாவுக்கு கணேந்திரன் எனும் சகோதரனும், கமலவதனா எனும் சகோதரியும் வந்து பின் னுதித்தார்கள். இம்மூவரும் சீரும் சிறப்புமாக வளர்ந்து வரும் நாளில் தங்களின் சிறு வயதினிலேயே விதியின் கொடுமையால் அன் னையை இழந்தார்கள்.

தந்தை வழிப்பாட்டன் பாட்டியின் பராமரிப்பில் தந்தையாரின் மேற்பார்வையில் வளர்ந்து வரும்நாளில் தனது தங்கை கமலவத னாவையும் காலன் கவர்ந்து விட்டான். இப்படிச் சோதனையும் வேதனையும் தொடரும் வேளையில் தனது கல்வியை பிறந்த ஊரின் புகழ்மிக்க கல்லூரியாம் அருணோதயாவில் கற்று வந்தார். கல்வியில் மேம்பட்டு G. C. E வகுப்பில் கற்றுவரும் நாளில் இவரை பராமரித்து வந்த பாட்டன் பாட்டியையும இழந்த துன்பத்தால் மேற்படிப்பைத் தொடராமல் தன் தம்பிக்கு அன்னை போலும் குடும்பப் பொறுப்பை ஏற்று வரும் காலத்தில் தந்தையையும் இழந்து சிறகொடிந்த பறவைகளாய் தானும் சகோதரனுமாய் வாழ்ந்து இருக்கும் பொழுது சகோதரனின் நன்முயற்சியால் குலதெய்வத் துணையாலே நல்லூரில் வாழும் சுப்பிரமணியம் தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும் யாழ்நகரின் ''நல்லைக்குமரன்'' வர்த்தக ஸ்தா பனத்தின் உரிமையாளருமாகிய தனபாலசிங்கம் (தனம்) என்பவரை தனது வாழ்க்கைத் துணைவனாக பெற்று இனிதே இல்லறம் நடத்தி வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" தேடி அலைந்தாலும் கிடைக்காத நல்முத்தே தேற்றுவார் யாருமின்றி தேம்பி நாம் கதறுகின்றோம். ஓடி நீ வருவாயே ஒன்றாய் நாம் வாழ்வதற்கு" என்று கணவரும் சகோதரனும் மாமன், மாமி, மைத்துனிமார், மைத்துனர், மருமக்கள், பெறாமக்கள், கதறியழ,

" மூளைக்காய்ச்சல் " என்னும் கொடிய நோய்க்காளாகி யாழ் வைத்தியசாலையில் அநுமதிக்கப்பட்டு 29. 9. 96 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.15 மணியளவில் இறைவன் திருவடி சேர்ந்தார். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

" உறங்குவது போலும் சாக்காடு உறங்கி விழிப்பது போலும் பிறப்பு "

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அருளில்லார்க்கு அவ்வுலகமில்லை பொருள்
இல்லார்க்கு இவ்வுலகமில்லை.

—திருக்குறள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# தோத்திரப் பாக்கள்

## விநாயகர் வணக்கம்

அல்லல் போம் வல்வினை போம்
அன்னை வயிற்றிற் பிறந்த
தொல்லை போம் போகாத்
துயரம் போம் — நல்ல
குணமதிகமான அருணைக்
கோபுரத்துள் மேவும்
கணபதியைக் கைதொழுதக் கால்

## தேவாரம்

1. தந்தையார் போயினார் தாயாரும் போயினார் தாமும் போவார்
கொந்தவேல் கொண்டொரு கூற்றத்தார் பார்க்கிறார் கொண்டு
— போவார்
எந்தநாள் வாழ்வதற்கே மனம் வைத்தியாலேழை நெஞ்சே
அந்தணாரூர் தொழுதுய்யலாமையல் கொண்டஞ்ச நெஞ்சே.

2. நீ நாளும் நன்னெஞ்சே நினைக்கண்டாய் யாரறிவார்
சாநாளும் வாழ் நாளும் சாய்க் காட்டெம்பெருமாற்கே
பூநாளும் தலை சுமப்பப் புகழ் நாமம் செவிகேட்ப
நாநாளும் நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே.

3. எத்தாயர் எத்தந்தை எச்சுற்றத்தார்
எம்மாடு சும்மாடாம் ஏவர் நல்லார்
செத்தால் வந்துதவுவார் ஒருவரில்லைச்
சிறுவிறகாற் தீமூட்டிச் செல்லாநிற்பர்
சித்தாய வேடத்தாய் நீடுபொன்னித்
திருவானைக் காவுடைய செல்வாஎன்றன்
அத்தாவுன் பொற்பாதம் அடையப்பெற்றால்
அல்லல் கண்டங்கொண்டடியேன் என்செய்கேனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. கருவுற்றநாள் முதலாக வுன்பாதமே காண்பதற்கு
உருகிற் றென்னுள்ளமு நானுங்கிடந்தலந் தெய் தொழிந்தேன்
திருவொற்றியூரா திருவாலவாயா திருவாரூரா
ஒருபற்று இலாமையும் கண்டிரங்காய் கச்சியேகம்பனே.

5. ஓவுநாளுணர் வழியுநாளுயிர் போகுநாளுயர் பாடைமேல்
காவுநாளிவை யென்றலாற்கது தேன்கிளர்புனற் காவிரிப்
பாவுதண் புனல் வந்திழி பரஞ்சோதிப் பாண்டிக் கொடுமுடி
நாவலாவுனை நான்மறக்கினும் சொல்லுநா நமச்சிவாயவே.

6. மீளா அடிமை உமக்கே ஆளாய் பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போல் உள்ளே கனன்று முகத்தால் மிகவாடி
ஆளாயிருக்கும் அடியார்தங்கள் அல்லல் சொன்னக்கால்
வாளாங்கிருப்பீர் திருவாரூரிர் வாழ்ந்து போதிரே

## திருவாசகம்

7. வைத்தநிதி பெண்டிர் மக்கள குலங்கல்வியென்றும்
பித்தவுலகிற் பிறப்போடிறப் பென்னுஞ்
சித்தவிகாரக் கலக்கந் தெளிவித்த
வித்தகத் தேவர்க்கே சென்றூ தாய்கோத்தும்பீ

8. பாருருவாய் பிறப்பறவேண்டும் பத்திமையும் பெறவேண்டும்
சீருருவாய சிவபெருமானே செங்கமலம் மலர் போலும்
ஆருருவாய என்னாரமுதே யுனை அடியவர் தொகை நடுவே
ஒருருவாய நின் திருவருள் காட்டி என்னையும் உய்யக்
கொண்டருளே

## திருவிசைப்பா

இடர் கொடுத் தென்னை ஆண்டு கொண்டென்னுள்
இருட் பிழம் பற வெறந் தெழுந்த
சுடர்மணி விளக்கின் உள்ளொளி விளங்குந்
தூயநற் சோதியுட் சோதீ!
அடல் விடைப்பாகா; அம்பலக் கூத்தா
அயனொடு மாலறியாமைப்
படரொளி பரப்பிப் பரந்து நின்றாளயத்
தொண்டனேன் பணியுமா பணியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

சொலாண்ட சுருதிப் பொருள் சோதித்ததூய் மனத் தொண்ட
— ருள்ளீர்
சில்லாண்டிற் சிதையுஞ் சில தேவர் சிவநெறி சேராமே
வில்லாண்ட கனகத் திரள்மேரு விடங்கன் விடைப்பாகான்
பல்லாண்டென்னும் பதம்கடந்தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## புராணம்

நன்மை பெருகஅருநெறியே வந்தணைந்து நல்லூரின்
மன்னு திருத் தொண்டனார் வணங்கி மகிழ்ந்தெழும் பொழுதில்
உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம் என்றவர் தம்
சென்னிமிசை பாதமலர் சூடினான் சிவபெருமான்.

## திருப்புகழ்

இருந்த வீடும் கொஞ்சிய சிறுவரும் உறுகேளும்
இசைந்த வூரும் பெண்டிரும் இளமையும் வளமேவும்
விரிந்த நாடும் குன்றமும் நிலையென மகிழாதே
விளங்குதீபம் கொண்டுனை வழிபட அருள்வாயே
குருந்திலேறுங்கொண்டலின் மருக பொன்வயலூரா
குராய்குலாவும் குன்றுறை குறமகள் மணவாளா
திருந்த வேதந் தண்தமிழ் தெரிதருபுல வோனே
சிவந்த காலும் தண்டையும் அழகிய பெருமானே

## திருமந்திரம்

ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுத்திட்டுப்
பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்
சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு
நீரினில்மூழ்கி நினைப் பொழிந்தனரே.

## நல்லூர் வெண்பா

நல்லூரான்வீதி நடந்தார் வினைத்தீர்க்கும்
சொல்லரிய காட்சி தருசுந்தரவேல் — எல்லோர்க்கும்
நாளும்வழி காட்டும் நம்பித் தொழுதெழுவோம்
தோளும் கடம்பும் துணை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பித் தொழுவார் நலம் பெறுவார் நல்லூரில்
தெம்புதந்து நிற்கின்ற சீர்வேலன் வெம்பி
அழுவாரைக் காப்பான்! அரகரா என்றே
அழுவாரைக் காப்பான் விரைந்து.

## கந்தரலங்காரம்

பொருபிடியும் களிறும் விளையாடும் புனச்சிறுமான்
தருபிடிகாவல! சண்முகவா! எனச்சாற்றி நித்தம்
இருபிடிசோறு கொண்(டு) இட்டு(உ)ண்(டு) இரு வினையோம்
— இறந்தால்
ஒருபிடிசாம்பரும் காணாது மாய உடம்பிதுவே.

கதிதனை ஒன்றையும் காண்கின்றிலேன் கந்தவேல் முருகா!
நதிதனையன்னபொய் வாழ்வில் அன்பாய் நரம்பால் பொதிந்த
பொதிதனையும் கொண்டு திண்டாடுமா(று) என்னைப் போதவிட்ட
விதிதனை நொந்து நொந்து இங்கே யென்றன்மனம் வேகின்றதே.

## கந்தரனுபூதி

மெய்யே யெனவெவ் வினைவாழ்வை யுகந்(து)
ஐயோ வடியேன லையத் தகுமோ
கையோ வயிலோ கழலோ முழுதுஞ்
செய்வோய் மயிலேறிய சேவகனே.

மின்னேநிகர் வாழ்வை விரும்பியயான்
என்னே விதியின் பயனிங் கிதுவோ
பொன்னே மணியே பொருளே யருளே
மன்னே மயிலேறிய வானவனே

## நடராஜப்பத்து

தாயாரிருந்தென்ன தந்தையுமிருந்தென்ன
தன்பிறவி உறவு கோடி
தனமலை குவிந்தென்னகன பெயரெடுத்தென்ன
தாரணியை யாண்டுமென்ன
சேயர்கள் இருந்தென்ன குருவாய்த் திரிந்தென்ன
சீஷர்கள் இருந்துமென்ன
சித்துபல கற்றென்ன நித்தமும் விரதங்கள்
செய்தென்ன நதிகளெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓயாது மூழ்கினும் என்ன பலன் நமனோலை
ஒன்றினைத்தான் தடுக்க
உதவுமோ இவை யெல்லாம் சந்தையுறவென்று தான்
உன்னிரு பாதம் பிடித்தேன்
யார்மீதில் உன் மனம் இருந்தாலும் உன் கடைக்
கண்பார்வை அது போதுமே
ஈசனே சிவகாமி நேசனே எனயீன்ற
தில்லைவாழ் நடராஜனே

## அபிராமி அந்தாதி

தனந்தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வவடிவுந்தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லனஎல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே

## நற்சிந்தனை நல்லூரான் திருவடி

நல்லூரான் திருவடியை நான் நினைத்த மாத்திரத்தே
எல்லாம் மறப்பேனடி கிளியே! இரவு பகல் காணேனடி 1

ஆன்மா அழியா ஒன்று அன்றெனக்குச் சொன்ன மொழி
நான் மறந்து போவேனோடி – கிளியே? நல்லூரான் தஞ்சமடி 2

தேவர் சிறைமீட்ட செல்வன் திருவடிகள்
காவல் எனக்காமெடி – கிளியே! கவலையெல்லாம் போகுமடி 3

எத்தொழிலைச் செய்தாலென் ஏதவத்தைப் பட்டாலென்
கந்தன் திருவடிகள் – கிளியே! காவல் அறிந்திடெடி 4

பஞ்சம்படி வந்தாலும் பாரெல்லாம் வெந்தாலும்
அஞ்சுவமோ நாங்களெடி – கிளியே – ஆறு முகன் தஞ்சமெடி 5

சுவாமியோகநாதன் சொன்ன திருப்பாட்டைந்தும்
பூமியிற் சொன்னாளெடி – கிளியே – பொல்லாங்கு தீருமெடி 6

## நல்ல மருந்து

நல்ல மருந்தொரு குருமருந்தை நான் நல்லூரில் கண்டேன் (நல்ல)

எல்லையில்லாப் பிணிதீர்க்கும் மருந்து
இம்மை மறுமைக்கு மேற்ற மருந்து (நல்ல)
இல்லையென்னாது கொடுக்கும் மருந்து
ஏழையடியார்க் கிரங்கு மருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லவன் செல்லப்பன் தந்த மருந்து
வாழ்த்துங் கணபதிக்கு வந்த மருந்து (நல்ல)
புல்லர்கள் கண்டும் புசியா மருந்து
புண்ணியர் யோகர் புசிக்கு மருந்து

## திருமுருகாற்றுப்படை

வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கைவேல் — வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்புங் குன்றும்
துளைத்த வேல் உண்டே துணை.

உன்னைஒழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை ஒருவரையான் பின்செல்லேன் — பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடிய வினைதீர்த்தருளும்
வேலப்பா செந்தில் வாழ்வே.

அஞ்சு முகம்தோன்றில் ஆறுமுகம் தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சல் எனவேல்தோன்றும் — நெஞ்சில்
ஒருகால் நினைக்கில் இருகாலும் தோன்றும்
முருகா என்றோதுவார் முன்.

முருகனே! செந்தி முதல்வனே! மாயோன்
மருகனே! ஈசன் மகனே! — ஒருகைமுகன்
தம்பியே! நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான்.

காக்கக் கடவிய நீ காவாதிருந்தக்கால்
ஆர்க்கும் பரமாம் ஆறுமுகவா! பூக்கும்
கடம்பா! முருகா! கதிர்வேலா — நல்ல
இடங்காண் இரங்காய் இனி.

## பட்டினத்தார் பாடல்

என் செயலாவ தியாதொன்றுமில்லை, இனித் தெய்வமே!
உன் செயலே யென்றுணரப் பெற்றேனிந்த வூனெடுத்த
பின் செய்த தீவினை யாதொன்றுமில்லை; பிறப்பதற்கு
முன் செய்த தீவினை யோவிங்ஙனேவந்து மூண்டதுவே?

உற்றரார் பெற்றரார் உடன்பிறப்பார் பிள்ளைகளார்
மற்றாரிருந்தாலென் மாளும் போதுத வுவரோ?
கற்றா இழந்த விளங்கன்றது போலே யுருகிச்
சிற்றாகிச் சிற்றின்பஞ் சேர்ந்தனையே நெஞ்சமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடிருக்கத் தாயிருக்க வேண்டு மனையாளிருக்கப்
பீடிருக்கவு ணிருக்கப் பிள்ளைகளுந் தாமிருக்க
மாடிருக்கக் கன்றிருக்க வைத்த பொருளிருக்கக்
கூடிருக்க நீபோன கோலமென்ன கோலமே!

பாக்கியத்தைக கண்டு பரிந்து மகிழாதே
தாக்குமிடிவந்தால் சலியாதே — நோக்கும்
ஒருத்தன் திருவிளையாட்டென்றுணரு நெஞ்சே!
கருத்தாலே நின்று கருது

காலன் வருமுன்னே கண்பஞ்சடையுமுன்னே
பாலுண் கடவாய் படுமுன்னே — மேல்விழுந்தே
உற்றாரழுமுன்னே ஊரார் சுடுமுன்னே
குற்றாலத்தானையே கூறு

இருப்பதுபொய் போவது மெய் என்றெண்ணி நெஞ்சே
ஒருத்தருக்குந் தீங்கினையுன்னாதே — பருத்த தொந்தி
நம்மதென்று நாமிருப்ப நாய் நரிகள் பேய் கழுகு
தம்மதென்று தாமிருக்குந் தாள்

பத்தும் புகுந்து பிறந்து வளர்ந்து பட்டாடைசுற்றி
முத்தும் பவளமும் பூண்டோடியாடி முடிந்த பின்பு,
செத்துக்கிடக்கும் பிணத்தருகே யினிச்சாம்பிணங்கள்
கத்துங்கணக் கென்ன காண்கயிலாயபுரிக்காளத்தியே.

என்னை அறியாமல் என்னுள்ளே நீ இருக்க
உன்னை அறியாமல் உடல் இழந்தேன் பூரணமே.

—பட்டினத்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன் பிரிவு
# எனக்கு உணர்த்திய உண்மை

கல்கத்தாவில் சிந்தூரியாபட்டி என்ற பகுதியில் மணிமோகன் மல்லிக் வாழ்ந்து வந்தார். ஒரு நாள் அவருடைய மகன் இறந்து விட்டான். அவன் மிகுந்த திறமைசாலியாக இருந்ததால் மணி மோகன் அவனிடம் மிகவும் அன்பு வைத்திருந்தார்.

மகனின் இறுதிச் சடங்குகள் முடிந்தபிறகு மணிமோகன் ஸ்ரீராம கிருஷ்ணரிடம் வந்தார்.

ஸ்ரீராமகிருஷ்ணரை வணங்கி விட்டு அறையின் ஒரு மூலையில் துயரம் நிறைந்த இதயத்துடன் அவர் அமர்ந்தார்.

அங்கு ஆண்களும் பெண்களுமாக பக்தர்கள் பலர் அமர்ந்திருந் தார்கள்.

குருதேவர் அவர்களுடன் பேசிக்கொண்டிருந்தார்.

சற்று நேரத்தில் மணிமோகன் உட்கார்ந்திருந்த பக்கமாக ஸ்ரீராம கிருஷ்ணரின் பார்வை சென்றது. தலையை அசைத்தபடியே மெல்ல அவர், ''என்ன? ஏன் இன்று வருத்தத்தோடு காணப்படுகிறாய்?'' என்று கேட்டார்.

அதற்கு மணிமல்லிக் கண்களில் நீர் வழிய குரல் தழுதழுக்க, ''இன்று என் மகன் இறந்து விட்டான்!'' என்றார்.

அவரது உருவத்தையும் தழுதழுத்த குரலையும் கேட்ட அனை வரும் வாயடைத்துப் போய் பேசாமல் உட்கார்ந்திருந்தார்கள். அவரது உள்ளத்தில் அலைமோதும் துன்பத்தை ஆறுதலான சொற் களால் மட்டும் போக்க முடியாது என்பதை அனைவருமே உணர்ந் திருந்தார்கள்.

இருந்தாலும் அவருடைய துன்பம், அழுகை ஆகியவற்றால் மனம் உருகிய அவர்கள், ''இது தான் உலக இயற்கை. பிறந்தவர்கள் எல் லோரும் ஒரு நாள் இறந்துதான் ஆகவேண்டும். நடந்துவிட்டதை மாற்ற முடியுமா? ஆண்டாண்டுதோறும் அழுது புரண்டாலும் மாண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டார் வருவரோ? அதனால் துக்கப்படாதே, பொறுமையாக அமைதியாக இரு'' என்றெல்லாம் ஆறுதல் கூறினார்கள்.

துக்கத்தில் ஆழ்ந்தவர்களுக்கு, படைப்பு தொடங்கிய நாள்முதல் இது போன்ற சொற்களையே சொல்லி நாம் ஆறுதல் படுத்துகிறோம்.

ஆனால் அந்தோ! இந்தச் சொற்கள் ஒருவருடைய உள்ளத்திற்காவது ஆறுதல் தந்திருக்குமா? எப்படி ஆறுதல் தரும்? மனம், சொல், செயல் ஆகிய மூன்றும் ஒன்று சேர்ந்து சொல்லும் சொற்கள் மட்டுமே மற்றொருவரின் உள்ளத்தைத் தொட முடியும்: மற்றொருவரின் துயரப் பேரலைகளை அமைதிப்படுத்த முடியும். ஆனால் இப்படிப்பட்ட ஒருங்கிணைந்த உணர்வு நம்மிடம் இல்லையே!

இந்த உலகம் நிலையற்றது என்று நாம் வாயால் சொல்கிறோம். ஆனால் நம் எண்ணமும் செயலும், அதற்கு நேர்மாறாக அல்லவா இருக்கின்றன!

'இந்த உலகம் கனவு போன்றது நிலையற்றது என்று மற்றவர்களுக்கு உபதேசித்திருக்கிறோம். ஆனால் இதயத்தின் ஆழத்திலோ. 'இது நிலையானது, இங்கேயே நாம் நிலையாக இருக்கப் போகிறோம். என்பது போல் அல்லவா நடந்து கொள்கிறோம்! இத்தகைய நமது சொற்கள் எப்படி மற்றவருக்கு நம்பிக்கை தரும் ஆற்றலைப் பெறும்?

இது போன்று எல்லோரும் மணிமோகனுக்கு ஆறுதல் தருவதாக நினைத்துக்கொண்டு ஏதேதோ சொல்லிக்கொண்டிருந்தார்கள்.

ஆனால் ஸ்ரீராமகிருஷ்ணர் மட்டும் எதுவும் பேசவில்லை. அமைதியாக அமர்ந்து அவர் மணிமோகனின் சோகப் பெருமூச்சுக்களைக் கேட்டுக்கொண்டிருந்ததுபோல் தோன்றியது.

குருதேவர் இவ்வாறு மணிமோகன் விஷயத்தில் உதாசீனமாக அமர்ந்திருந்தது, சிலருக்குத் திகைப்பை ஏற்படுத்தியது. அவர்கள், 'இவர் இதயம் என்ன கல்லா? கருணை என்பதே இவர் இதயத்தில் இல்லாமல் போய் விட்டதா?' என்றெல்லாம் ஸ்ரீராமகிருஷ்ணரைப் பற்றி நினைத்தார்கள்.

மணிமோகன் கூறியதைக் கேட்ட சிறிது நேரத்திற்கெல்லாம் குருதேவர் தெய்விக பரவச நிலையில் ஆழ்ந்தார். திடீரென்று எழுந்து, என்றுமில்லாத வேகத்துடன் தெய்விக நிலையில் இருந்தபடியே மணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோகனை மனதில் வைத்து பாடுவதுபோல் தாமே தாளமிட்டபடி பின்வரும் கருத்தமைந்த பாடலைப் பாட ஆரம்பித்தார்:

'' உலக மயக்கத்தில் ஆழ்ந்திருக்கும் மனிதனே! விழித்துக்கொள்! அதோ, யமன் போர்க்கோலத்தில் உன் வீட்டில் நுழைகிறான், பார்!

'' சிறந்த புண்ணியம் என்ற தேரில் ஏறி, அதில் சாதனை, பஜனை என்ற இரண்டு குதிரைகளைப் பூட்டி, ஞானம் என்ற வில்லில், பக்தி என்ற பிரம்மாஸ்திரத்தை நாண் ஏற்று.''

பாடலில் இருந்த வீரரசம், அதை வெளிப்படுத்திய சொற்களின் அமைப்பு, அவற்றுடன் இழைந்த குருதேவரின் குரல், அவரது கண்களில் தோன்றிய வீர வைராக்கியம் – ஆகிய அனைத்தும் சேர்ந்து அந்தப் பாடல் கேட்டவர்களின் உள்ளத்தில் எல்லையற்ற ஆற்றலையும் நம்பிக்கையையும் ஏற்படுத்தியது.

அதன் காரணமாக அங்கிருந்த எல்லோருடைய மனங்களும் சோகம் நிறைந்த மாயையுலகிலிருந்து விடுபட்டு, புலன்களுக்கும் உலகிற்கும் எட்டாத தூய ஆனந்தத்தால் நிரம்பி வழிந்தது.

மணிமோகனும் தனது இதயத்தை பிழிந்தெடுத்த வேதனையை மறந்தார்; மன அமைதி பெற்றார்.

பாடல் முடிவடைந்தது.

ஆனால் அந்தப் பாடலின் மூலம் குருதேவர் அனைவரிடமும் தட்டி யெழுப்பிய திவ்ய ஆன்மிக உணர்வலைகள் அந்த அறையில் நீண்ட நேரம் நிலைத்து நின்றது.

'கடவுள் ஒருவர் மட்டுமே நம்முடையவர், நம் இதயத்தையும் வாழ்க்கையையும் அவருக்கே அர்ப்பணிக்க வேண்டும். அவர் தம்து கருணையை நம்மீது பொழிந்து தமது காட்சியை நமக்கு வழங்கட்டும்' – இந்த மனநிலையில் அங்கு எல்லோரும் தங்களை மறந்து அமர்ந்திருந்தார்கள்.

சிறிது நேரத்தில் ஸ்ரீராமகிருஷ்ணரின் மனம் தெய்விக பரவச நிலையிலிருந்து உலக நினைவுக்குத் திரும்பியது. அவர் மணிமோகனின் அருகில் சென்று அமர்ந்து பேச ஆரம்பித்தார்: ''ஆ! மகனை இழந்த துன்பத்திற்கு இணையான வேறு ஒரு துன்பம் உலகில் இருக்க முடியுமா? சொந்த உடலிலிருந்து தோன்றியவன் அல்லவா மகன்? இந்த உடல் இருக்கும்வரை தந்தை – மகன் உறவும் அழியாமல் நீடிக்கும்.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் பிறகு ஸ்ரீராமகிருஷ்ணர் தமது அண்ணன் மகனான அட்சயனின் மரணத்தைப் பற்றி உருக்கமாக மணிமோகனிடம் கூறினார். மீண்டும் அவர் ஒரு முறை அந்தத் துன்பத்தை அனுபவிப்பது போலவே தோன்றியது:

''அட்சயன் இறந்து கிடந்தான். அப்போது எனக்குப் பெரிதாக எதுவும் தோன்றவில்லை. எப்படி ஒருவன் இறக்கிறான் என்று நின்று கொண்டு பார்த்துக்கொண்டிருந்தேன். அது உறையிலிருந்து கத்தியை உருவி எடுத்ததுபோல் இருந்தது. உறை மட்டும்தான் கீழே விழுந்தது! அதைப் பார்த்ததும் எனக்கு சந்தோஷம் தாங்க முடியவில்லை. வேண்டிய மட்டும் சிரித்தேன். ஆடினேன், பாடினேன்! பிறகு அவனது உடலைத் தகனம் செய்துவிட்டுத் திரும்பினார்கள். அப்போதும் எந்த உணர்ச்சியும் என்னைப் பாதிக்கவில்லை. ஆனால் மறுநாள் நான் காளிகோயில் தாழ்வாரத்தில் நின்றுகொண்டிருந்தபோது துக்கம் என்னுள் பொங்கியது. ஈரத்துணியை முறுக்கிப் பிழிவதுபோல் அட்சயனின் மரணம் என் இதயத்தைப் பிழிந்து வேதனைப்படுத்தியது. நான் நினைத்துக்கொண்டேன்: 'அம்மா! இங்கு (நான்) அணிந்திருக்கும ஆடையுடன் கூட எனக்கு எந்தவிதத் தொடர்பும் இல்லை. (அப்படியிருக்கும்போது) அண்ணன் மகனிடம்தான் என்ன பற்று! இங்கேயே (எனக்கே) இந்த நிலையென்றால் இல்லறத்தில் இருப்பவர்களின் நிலையைப்பற்றி என்ன சொல்ல இருக்கிறது? அதைத்தான் நீ எனக்கு உணர்த்தியிருக்கிறாய், அல்லவா!' ''

சிறிது நேரத்திற்குப் பிறகு குருதேவர் தொடர்ந்தார்:

'' ஆனால் ஒன்று தெரியுமா? தாங்க முடியாத இந்த வேதனையும், இறைவனிடம் சரண் புகுந்தவர்களை ஒரேயடியாக மூழ்கடித்து விடுவதில்லை. சிறிது அலைக்கழித்தபிறகு அவர்களை மீண்டும் சம நிலைக்குக் கொண்டுவந்து விடுகிறது. கங்கையில் மீன் பிடிப்பவர்களின் சிறிய படகுகளின் நிலையைப் பார்த்ததில்லையா? பெரிய நீராவிக் கப்பல்கள் சிறிது தத்தளித்தாலும் சமாளித்துக்கொண்டு தன் பழைய நிலைக்குத் திரும்பிவிடுகின்றன. ஆனால் சிறிய படகுகள் மூழ்கிவிடுகின்றன. என்றாலும் அலைகளின் வேகத்தை அனைத்துமே அனுபவித்துத்தான் ஆகவேண்டும். ''

மறுபடியும் சிறிது நேரம் ஸ்ரீராமகிருஷ்ணர் அமைதியாக இருந்தார். பிறகு கூறினார்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''தந்தை – மகன் போன்ற இந்த உறவுகள் சில நாட்களுக்குத் தான்! இன்பநுகர்ச்சிக்காகவே மனிதன் இல்லறத்தில் ஈடுபடுகிறான்; திருமணம் செய்து கொள்கிறான்; மகனைப் பெறுகிறான்; மகன் வளர்கிறான்; மகனுக்குத் திருமணம் செய்து வைக்கிறான். இவ்விதம் சில நாள்கள் கழிகின்றன. பின்னர் ஒருவனுக்கு நோய், மற்றொருவனின் மரணம், ஒருவன் பொறுப்பற்றவன் – என்று கவலைகளும் துன்பங்களும் அவனைச் சூழ்ந்து கொள்கின்றன. ஏமாற்றங்கள் அதிகமாக அதிகமாகப் புலம்பலும் அதிகரிக்கிறது. ஈரவிறகு எரியும் விதத்தை நீ பார்த்ததில்லையா? முதலில் அது நன்றாக எரியும். அப்போது விறகிலுள்ள ஈரம் முழுவதும் விறகின் மறுபக்கம் கசிந்து வழியும்; நுரை தள்ளும், 'சுப் – சுப், புஸ் – புஸ்' என்று பலவகைச் சத்தங்களுடன் குமிழாக வெடிக்கும்.''

இப்படி வாழ்க்கையின் நிலையாமை, பயனற்ற தன்மை, இறைவனிடம் சரணாகதி அடைவது மட்டுமே மகிழ்ச்சியைப் பெறும் வழி போன்ற பல கருத்துக்களை ஸ்ரீராமகிருஷ்ணர் எடுத்துச் சொல்லி மணிமோகனுக்கு ஆறுதல் கூறினார். மணிமோகனும் மன அமைதி பெற்றார்.

''ஐயனே! இதற்காகத்தான் நான் தங்களை நாடி ஓடி வந்தேன். தங்களைத் தவிர வேறு யாராலும் இந்தத் துயர நெருப்பை அணைக்க முடியாது என்று எனக்குத் தெரியும்'' என்று நாத்தழுதழுக்க மணிமோகன் ஸ்ரீராமகிருஷ்ணரிடம் கூறினார்.

குருதேவரின் இந்த வினோதமான நடத்தையைப் பார்த்து நாங்கள் ஆச்சரியப்பட்டோம்; 'கடின இதயம் படைத்தவர் என்று இவரையா நாம் நினைத்தோம்!' என்ற எண்ணம் எங்கள் மனதில் எழுந்தது.

மகாத்மாக்கள் சிறிய விஷயங்களில்கூடச் சாதாரண மனிதர்களைப்போல் நடந்துகொள்வதில்லை. பெரிய, சிறிய எல்லாச் செயல்களிலும் அவர்களின் உயர்ந்த தன்மையை நாம் பார்க்க முடியும்.

இதோ, சற்று நேரத்திற்கு முன்பு இதயத் துடிப்புக்கூட நின்று போய், சமாதியில் ஆழ்ந்திருந்த அதே மனிதரா இவர்? அதே குருதேவரா மணிமோகனின் நிலைக்கு இரங்கி அவர் மீது கருணை கொண்டு சாதாரண மனிதரைப்போல் நடந்துகொள்கிறார்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மாயை, அற்ப விஷயம்' என்றெல்லாம் சொல்லி மணிமோகன் கூறியதை அவர் முழுவதுமாக ஒதுக்கியிருக்கலாம்! அப்படி அவரால் செய்ய முடியாது என்பதல்ல. ஆனால் அவர் அப்படிச் செய்திருந்தால் நாம் – அவர் மகாத்மாவாக இருந்தாலும் சரி, வேறு யாராக இருந்தாலும் சரி – அவரை ஜகத்குரு என்று ஏற்றுக் கொண்டிருக்க மாட்டோம்; சாதாரண மனிதர்களின் உணர்ச்சிகளைப் புரிந்து கொள்ளாதவர் என்றுதான் நினைத்திருப்போம். மனைவி – மக்கள் போன்ற பந்தபாசத்தில் சிக்கி உழலும் சாதாரண மக்களின் நிலையை ஒருமுறையாவது அனுபவித்திருந்தால், இவர் எப்படி இவையெல்லாம் 'மாயையின் திருவிளையாடல்' என்று சொல்லி ஒதுக்கியிருப்பார் என்று நினைத்திருப்போம்.

நீர்நிலையில் கல்லை எறிந்தால், நீரை மூடிக்கொண்டிருந்த பாசி கலைந்து நல்ல நீர் கண்ணுக்குப் பலப்படும். அது போல நல்லவர்கள் சொல்லும் சொற்களில் உண்மைப் பொருளை ஆராய்ந்தறிந்தால் அறிவு தெளிவடையும்.

—தாயுமானவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிமொழிகள்

1. பிறப்பும் இறப்பும் தெய்வத்தினால் அளிக்கப்பட்ட வெகுமதி. தன் உயிரைப் போக்கிக்கொள்ள மனிதனுக்கு அதிகாரம் கொடுக்கப்படவில்லை.

2. இயற்கை உண்மையை அறிந்து கொள்வதற்கு
   1) கேள்வி ஞானம்
   2) சிந்தனை ஞானம்
   3) அனுபவ ஞானம் என்ற மூன்று ஞானத்தையும் முழுமையாகப் பெறவேண்டும்.

3. வாழ்க்கை சிலபேருக்கு நாடகமாகத் தோன்றுகிறது. நாடகம் சிலபேருக்கு வாழ்க்கையாகத் தோன்றுகிறது.

4. சாகப் போகிறவனுக்குப் பெயர் மனிதன், சாவை வரவேற்பவனுக்குப் பெயர் வீரன். சாவைக்கண்டு ஓடுபவனுக்குப் பெயர் கோழை.

5. தவறு செய்தபின் அளிக்கும் புத்திமதி இறந்தபின் அளிக்கும் மருந்து போன்றது.

6. தவறுகள் எல்லாம் மோட்டார் காரின் "ஹெட்லைட்" மாதிரி, நம்முடைய காரில் உள்ள "ஹெட்லைட்" நமக்குத் தெரியாது. எதிரில் வருகின்ற காரின் 'ஹெட்லைட்' தான் நமக்கு நன்றாகத் தெரியும்.

7. ஒரு விநாடியில் செய்த தவறு வாழ்நாள் முழுவதும் கவலை தருகிறது.

8. மனிதனின் இறப்பு என்பது ஒரு மாற்றமே. குழந்தையாய் இருந்து வாலிபம் அடைந்து முதுமை அடைவது எப்படி ஒரு மாற்றமோ அதைப் போன்றே இறப்பும். இது தவிர்க்க முடியாது.

9. நட்டந்தால் நாடெல்லாம் உறவு, படுத்தால் பாயும் பகை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. மரத்தை வெட்டி எறிந்து விட்டாலும் திரும்பவும் வளர்கிறது. தேயும் சந்திரன் மறுபடியும் முழுமதியாக வளர்கின்றான். இதையறிந்த அறிஞன் துன்பம் வரும்போதும் வருந்துவதில்லை.

11. கடவுள் பாவங்களை மன்னிக்கிறார். இல்லாவிடில் சுவர்க்கம் காலியாக இருக்கும்.

12. கர்வமுள்ளவன் கடவுளை இழக்கிறான். பொறாமைக்காரன் நண்பனை இழக்கின்றான். கோபக்காரனோ தன்னையே இழக்கிறான்.

13. கடவுளை நோக்கி ஓர் அடி நடந்தால் கடவுள் அவனை நோக்கி ஓடி வருகிறார்.

14. வணங்க ஆரம்பிக்கும் போதே வளர ஆரம்பிக்கிறோம்

15. சோம்பேறிகளின் பிரார்த்தனைக்கு கடவுள் ஒருபோதும் செவி சாய்ப்பதில்லை.

16. பகவானை மனமார ஆராதிக்காமல் எவ்வளவு ஆடம்பரத்துடன் பூஜை செய்த போதிலும் பயன் இல்லை.

17. தன்கையே தனக்கு உதவி என்பவர்களுக்குத்தான் கடவுளும் உதவுகிறார்.

18. கடவுள் தகுதியுடையவர்களுக்கு இரக்கம் காட்டுகிறார். தகுதியற்றவர்களுக்கு நியாயத்தை மட்டும் வழங்குகிறார்.

19. இன்றைய தினம் நம் கையில்தான் இருக்கிறது. நாளை நடப்பது இறைவனிடம் இருக்கிறது.

20. நாம் எல்லோரும் மரண தண்டனைக்கு உள்ளானவர்கள். ஆனால் தூக்கிலிடும் தினம் தான் வித்தியாசம்.

21. மற்றவர்களின் துயரத்தைக் கண்டு இரக்கப் படுங்கள், ஆனால் உங்கள் கஷ்டத்தை உங்களிடமே வைத்திருங்கள்.

22. நீ மற்றவர்களுக்கு கொடுக்க விரும்பாததை நீ மற்றவர்களிடம் கேட்கக் கூடாது.

23. பகைவனைக் கண்டு பயந்தால் நம்பலம் போய்விடும். அதுவே பகைவனுக்கு வலிமையைத் தந்துவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. இரண்டு பேர்கள் என்றுமே திருப்தி அடைவதில்லை, அறிவைத் தேடுகிறவனும் செல்வத்தைத் தேடுகிறவனும்

25. சூரியன் நுழையாவீட்டில் வைத்தியன் நுழைகிறான்.

26. பொருள் ஈட்டுவதில் நாட்டம் உள்ளவனாயிருக்கும் வரைதான் உன்னை அண்டியவர்கள் பற்றுடையவர்களாயிருப்பர். அதன் பின் மூப்படைந்த உடலில் வாழ்ந்தால் வீட்டில் ஒரு வார்த்தை கூடக் கேட்கமாட்டார்கள்.

27. பளிங்கு மாளிகையின் மேல்பூச்சு மாதிரி இல்லாமல் கட்டிடத்தின் அடிக்கல் போலவே வாழ ஆசைப்பட வேண்டும்.

28. வீணாய்ப் போன நாள் ஏது? நாம் ஒருதடவை கூடச் சிரிக்காமல் கழித்துவிட்ட நாள்.

29. மனிதன் எல்லாப் பிராணிகளையும் கட்டுப்படுத்தி விடுவான். ஆனால் தன்னைத்தானே கட்டுப்படுத்திக் கொள்ள முடிவதில்லை.

30. படிக்கப் படிக்க பணிவு மிக்க மனிதனாக உயர்கிறோம். தியாகம் செய்யச் செய்ய வல்லமை மிக்க மனிதனாக எழுச்சி பெறுகிறோம்.

31. ஆணவமும் அகம்பாவமும் என்றாவது ஒருநாள் நமக்கே எதிரியாக நிற்கும்.

32. சிந்திக்காமல் படிப்பது ஜீரணிக்காமல் சாப்பிடுவதைப் போன்றது.

33. நம்பிக்கையைப் பிறர் தரமுடியாது. அது உள்ளத்திலேயே உற்பத்தியாக வேண்டும்.

34. தீமை விரைவில் செய்யப்படுகிறது. அதனால் ஏற்படும் புண் நீண்ட காலம் வலித்துக் கொண்டிருக்கிறது.

35. வாயும் கையும் சுத்தமாக இருந்தால் உலகம் முழுவதும் செல்லலாம்.

36. பொய் சொல்லுவது கேவலமல்ல. அது மனித இயல்பு. அந்தப் பொய்யை நம்புவது தான் கேவலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

37. வெள்ளம் பள்ளத்தை நாடும். விதி புத்தியை நாடும்.

38. பேராசை வறுமையைக் குறிக்கிறது.
அவாவின்மை செல்வத்தைக் குறிக்கிறது.

39. நீ உடலில் அணியும் உடையை விட மேலானது முகத்தில் அணியும் மலர்ச்சி.

40. பொறுமை இல்லாத மனிதன் எண்ணெய் இல்லாத விளக்குப் போன்றவன்.

41. நம்பிக்கை எதையும் துணிந்து செய்கிறது.
அன்பு எதையும் பொறுத்துக் கொள்கிறது.

42. கோபத்தால் சாதிப்பதை விட பொறுமையால் ஒருவன் அதிகம் சாதிக்கிறான்.

43. விருப்பு வெறுப்பில்லாமல் புலன்களை மனத்தால் கட்டுப்படுத்தி தனக்குத் தானே விதி வகுத்துக்கொண்டு நடக்கும் மனிதன் ஆறுதலடைகிறான்.

44. வாழ்வதில் தான் இன்பம். உழைப்பதில் தான் வாழ்வு.

45. ஆன்மீகச் சிந்தனை வாழ்நாள் முழுமைக்கும் ஒரு சொத்து.

46. நீ வாழ்க்கையில் முன்னேற வேண்டுமானால் உன்னுடைய கால்களால் நடந்து போ. மற்றவர்களின் முதுகின் மேல் ஏறிப்போக விரும்பாதே, அது உனக்கு ஆபத்து

47. தேவைக்கு உட்பட்ட செல்வம் உன்னை சுமக்கும், தேவைக்கு அதிகமான செல்வம் உனக்கு சுமையாகும்.

48. பிறரை நம்பி வாழ்பவருக்கு வறுமை எப்போதும் இருந்து கொண்டு தான் இருக்கும்.

49. எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியிலும் விழிப்பாக இருந்தால். போக வேண்டிய இடத்தை உறுதியாக அடையலாம்.

50. அவசரம் ஆளை மட்டுமல்ல அலுவலையும் கெடுக்கிறது.

51. வாக்குறுதி என்பதும் ஒருவகைக் கடனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

52. வேதனையைப் பொறுத்துக் கொள்பவனே வெற்றி பெறுவான்.

53. இரண்டு மொழிகள் தெரிந்த ஒரு மனிதன் இரண்டு மனிதர்களுக்குச் சமம்.

54. பெரிய வேலைகளை நிறைவேற்ற அதிகாலையில் எழல் வேண்டும். தூக்கத்தில் பற்றுவைத்தால் வறுமை வந்து விடும்.

55. அன்பு என்பதை வாயால் சொல்வதைவிட செயல் மூலம் செய்து காட்ட வேண்டும்.

56. சோம்பல் உன்னை ஏமாற்றாமல் காத்துக்கொள். ஏனெனில் அதற்கு இன்று ஒரு நாளைக் கொடுத்தால் அது அடுத்த நாளையும் திருடிக் கொள்ளும்.

57. புனிதமான செயல்களினால் கமழும் நறுமணம் தான் புகழ்.

58. வலிமையில்லாதவர்கள் விட்டுக் கொடுப்பது பயத்தால் விட்டுக் கொடுப்பதே.

59. தரித்திரம் நெருப்பால் நெய்த ஆடை.

60. வலிமையில்லாதவர்கள் எப்போதும் கோழைகளாகவும் சந்தேகப்படுபவர்களாகவுமே இருப்பார்கள்.

61. அன்புக்கும் அறிவுக்கும் எல்லையே இல்லை.

62. பழக்கம் ஒரு முழு வளர்ச்சியடைந்த மலை. அதைத் தாண்டுவதும் கடினம். தகர்ப்பதும் கடினம்.

63. பூமியில் ஒரு குடிசை கட்ட வசதியற்ற பலர் ஆகாயத்தில் அரண்மனைகள் கட்டுகிறார்கள்.

64. நாவடக்கம் என்பது 'பேசாமல் இரு என்பதல்ல' 'பேசத் தகாதவற்றைப் பேசாதே' என்பதாகும்.

65. துன்பமும் தியாகமும் சுதந்திரத்தின் விலை.

66. மனிதனுடைய பேச்சுத்தான் அவன் எண்ணங்களை வெளிப்படுத்தும் கண்ணாடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

67. தான் செய்வதை யாரும் கண்டுபிடிக்கப் போவதில்லை என்று நிச்சயமாகத் தெரிந்திருக்கும்போது ஒரு மனிதன் என்ன செய்கிறானோ அதை வைத்து அவனது உண்மையான குணத்தை மதிப்பிட்டு விடலாம்.

68. கடன்காரனாக எழுந்திருப்பதை விட சாப்பிடாமல் படுக்கைக்குச் செல்வது நல்லது.

69. கோபிக்கத் தெரியாதவன் முட்டாள். கோபிக்க விரும்பாதவன் விவேகி.

70. உண்மையான குடும்பப் பெண் ஒரே சமயத்தில் அடிமையாகவும், எஜமானியாகவும் இருப்பாள்.

71. சந்தோசத்தைக் காண்பதற்கு ஒருவன் களைக்கும் வரை நடக்க வேண்டும்.

72. வாழ்க்கை நல்ல முறையில் வாழப்பெற்றதா என்பதை, ஆண்டுகளைக் கொண்டு கணக்கிடாமல், செயல்களைக் கொண்டு கணக்கிட வேண்டும்.

73. ஓர் மௌனம் நூறு தடைகளை வென்றுவிடுகிறது.

74. முறிந்த கையைக் கொண்டு உழைக்க முடியும். ஆனால் உடைந்த உள்ளத்தைக் கொண்டு உழைக்க முடியாது.

75. உலகில் அதிசயமான காரியம் முட்டாள் வெற்றியடைவதும் அறிஞன் தோல்வியடைவதும் தான்.

76. அநேக மனிதர்கள் எதிலும் தோல்வியடைவதில்லை. காரணம் அவர்கள் எதைச் செய்யவும் முயல்வதே இல்லை.

77. உலகை ஆட்டி வைக்க விரும்புபவன் முதலில் தன்னை இயக்கத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

78. ஒரு பெண் பேசும் போது நீயும் பேசாதே. புன்சிரிப்புப் போதும்

79. நல்ல மனிதன் பதவியை அலங்கரிக்கிறான். பதவி அவனை அலங்கரிப்பதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

80. சுறுசுறுப்போடு இயங்கும்போது தான் மனிதன் ஒளிவீசுகிறான்.

81. தவறான பாதையில் நீ எவ்வளவு தூரம் சென்றிருந்தாலும் திரும்பி வா.

82. தேவையானதை வாங்காதே. தவிர்க்க முடியாததை மட்டும் வாங்கு.

83. ஆரோக்கியமே இளமை. கடன் இல்லாமல் இருப்பதே செல்வம்.

84. ஐயப்பாடு விவேகத்தின் தொடக்கம். முடிவு அல்ல.

85. பறவைக்குப் பயந்து விதைக்காமல் இருக்காதே. தீமைக்குப் பயந்து நன்மை செய்யாமல் இருக்காதே.

86. அன்பு குறைந்த இடத்தில் குற்றங்கள் பெரிதாகத் தோன்றுகின்றன.

87. அமைதி இல்லாத இடத்தில் இன்பம் இருக்க முடியாது.

88. மக்களோடு சமாதானமாக வாழ், உன் பாவங்களோடு சண்டை செய்.

89. தீயமனம் என்பது சொந்த வீட்டிலேயே இருக்கும் திருடனைப் போன்றது.

90. உரத்த குரலில் பேசுகிறவன் சரியாகப் பேசுகிறான் என்பதில்லை.

91. அறியாமை அடிமைத்தனத்தைச் சம்பாதிக்கிறது.

92. பிறரின் உழைப்பின் பலனை உறிஞ்சி வாழ ஒருவர் கொள்ளும் ஆசையே, உலகத்தின் பாவங்களில் மூலமும் முதலுமான பாவம்.

93. சோம்பல் என்பது உழைப்பை விட அதிகம் களைப்பைத் தரும்.

94. அமைதியான மனம் மனிதன் அடையும் பாக்கியம்.

95. வாழ்வில் மிகுந்த கசப்பை சுவைக்காதவர்கள் மிகுந்த இன்பத்தைச் சரியாக உணரமாட்டார்கள்.

96. செயலைச் செய்துவிட்டு அழுவதற்கு முன் அதைச் செய்யாமல் இருப்பது நன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

97. எல்லாப் புண்களுக்கும் காலம் தான் களிம்பு

98. நாம் நம் செயல்களைத் தீர்மானிக்கிறோம். நம் செயல்களும் தீர்மானிக்கின்றன.

99. தெய்வ நம்பிக்கை உள்ளவர்களானாலும் சரி தெய்வ நம்பிக்கை இல்லாதவர்கள் ஆனாலும் சரி எந்த மார்க்கத்தைச் சேர்ந்தவர்கள் ஆனாலும் சரி அவர்களுக்குத் தியானம் அவசியம்.

100. மாசில்லா பக்தி கொண்டவர்கள் துன்பங்கள் நீங்க வேண்டும் என்று கூட ஆண்டவனை வேண்டுவதில்லை. அப்படிப்பட்டவர்கள் துன்பம் சூழ்ந்த போதும் அதைத் தாங்கும் சக்தியையும் ஆண்டவன் அருளால் பெறுகிறார்கள்.

பரமாத்மா மனித உடலாகிய தேவாலயத்தில் கோயில் கொண்டிருக்கிறார். அவரை சமத்துவ மனதால்தான் அறிய முடியும்,

—யோக சாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி நவிலல்

என்பிரிய நாயகி சந்திரவதனா விதியின் கொடுமையால் எம்மிடம் இருந்து பிரிந்து விட்டார் அத்தருணம் அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டு எமக்கு ஆறுதல் மொழி கூறியும், பலவித உதவிகள் நல்கியும் அனுதாபச் செய்திகள் அனுப்பியும், அன்னாரின் அந்தியேட்டி சபிண்டீகரணச் சடங்குகளில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

258, கோவில் வீதி.
நல்லூர்.

இங்ஙனம்
கணவர்.

பாரதி பதிப்பகம், 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org